**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 207/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 1 |
| Name : | திருமதி. ஷோபனா |
| Father's Name/Husband Name: | திரு. சீனிவாசன் |
| Village : | பெரம்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 33/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 ஆஜர். எதிரிகள் 2, 3 ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

**சாட்சியானவர் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு எதிரியின் தரப்பில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் நிலை விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் எனது புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எனக்கு எழுத படிக்கத் தெரியும். புகாரை நான் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. புகாரை எந்த போலிஸ் ஸ்டேசனில் யாரிடம் கொடுத்தேன் என்றால் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மகளிர் போலிசாரிடத்தில் கொடுத்தேன். திருமணத்தின் போது 21 பவுன் நகை மற்றும் 1 லட்சம் மதிப்புள்ள வீட்டுப் பொருட்கள் கொடுத்ததற்கான ஆவணங்களை போலிசாரிடமோ அல்லது புகாரிலோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் 1, 2 ஆகியோர்கள் எந்த தேதியில் கையால் அடித்து கொடுமை படுத்தினார்கள் என்று எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 3ம் எதிரி துடைப்பத்தால் என் உடலின் எந்த பகுதியில் அடித்தார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. 06.04.2007 ஆம் தேதி எனக்கு

பெண் குழந்தை பிறந்ததற்கான மருத்துவ செலவுகள் அனைத்தையும் எதிரிகள் தான் செய்தார்கள் என்றால் சரியல்ல. 2ம் எதிரியான எனது மாமனார் எந்த தேதியில் எந்த இடத்தில் தவறாக என்னிடம் நடந்து கொண்டார் என்று புகாரிலும், போலிசார் விசாரணையிலும் மற்றும் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நகை, பணம் கேட்டு எந்த தேதியில் என்னை கொடுமை செய்தார்கள் என்று புகார் மற்றும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியான எனது மாமனார் என்னிடம் தவறாக நடந்து கொண்டார் என்று 1ம் எதிரியான எனது கணவருக்கு போன் மூலம் எந்த தேதியில் எந்த போன் எண்ணிலிருந்து எந்த போன் எண்ணிற்கு தகவல் சொன்னேன் என்று புகாரிலும், போலிசார் விசாரணையிலும் எனது முதல் விசாரணையிலும் அந்த செல்போன் நெம்பரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையாகவே பேசியிருந்தால் அந்த செல்போன் நெம்பரை சொல்லியிருப்பேன் என்றால் சொல்லியிருக்கிறேன். நான் எந்த தேதியில் நான் கணவர் வீட்டிலிருந்து கொடுமை தாங்காமல் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றேன் என்று புகாரிலும், போலிசார் விசாரணையிலும் எனது முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஊர்க்காரர்கள் வந்து சமாதானம் செய்து என்னை அனுப்பி வைத்தார்கள் யார் யார் என்று எனது புகாரில் சொல்லியது உண்மை என்றால் அவர்களின் பெயர்களையும் புகாரிலும், போலிசார் விசாரணையிலும் எனது முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 2வது பெண் குழந்தை எப்போது பிறந்தது என்றால் 2011ம் ஆண்டு பிறந்தது. 2வதும் பெண் குழந்தை பிறந்ததால் இரண்டு பெண் குழந்தைகளையும் எதிரிகளிடமே விட்டுவிட்டு அவர்களிடம் சொல்லாமல் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் தனலெட்சுமி கல்லூரியில் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். பெரம்பலூரில் கார் கம்பெனியில் நான் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் வேலை செய்யும்போது ஆண் நபர்களுடன் பழக்கம் ஏற்பட்டதால் தான் நான் எனது இரண்டு பெண் குழந்தைகளையும் எதிரிகளிடம் விட்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. இதுநாள் வரை எதிரிகளின் பராமரிப்பில் வளரும் எனது இரண்டு பெண் குழந்தைகளையும் பார்க்க சட்ட ரீதியாக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் பெண் குழந்தையின் வயது என்ன என்றால் 15 அல்லது 16 இருக்கும்.

என் முதல் பெண் குழந்தை எப்படி இருப்பார் என்ன படிக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் எந்த கல்லூரியில் படிக்கிறார் என்றால் எஸ்ஆர்எம் கல்லூரியில் நர்சிங் படிக்கிறார் என்று நினைக்கிறேன். நான் சொல்வது போல் எனது முதல் குழந்தை நர்சிங் படிக்கவில்லை என்றாலும் அவர் 1ம் எதிரியின் பராமரிப்பின் பேரில் B.E., படித்துக் கொண்டிருக்கிறார் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. எனது இரண்டு பெண் குழந்தைகளையும் 1ம் எதிரியிடமே விட்டு சென்றுவிட்டு பெரம்பலூர் மாவட்ட நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கோரி 1ம் எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சீதனப் பொருட்கள் மற்றும் நகைகளை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மனுவில் வாழ்க்கை பொருளுதவியாக மாதம் 10000 கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் என்னையும் 1ம் எதிரியையும் பெரம்பலூரில் இருக்கிற சமரச மையத்திற்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். அந்த சமரச மையத்தின் மூலம் எதிரியும் நானும் சமாதானமாகி 7 பவுன் நகை, 1 லட்சம் பணமும் எதிரியிடம் பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். மேலும், 1ம் எதிரிக்கு எதிரான இந்நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கினை திரும்ப பெற்றுவிடுவதாக உடன்படிக்கையில் கூறி கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி எந்த தேதியில் எந்த இடத்தில் எத்தனை மணிக்கு 2வது திருமணம் செய்து கொண்டார் என்று எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் மற்றும் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி திருமணம் செய்து கொண்டதற்கான புகைப்படம் போன்ற எந்த ஆதாரங்களையும் எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் மற்றும் முதல் விசாரணையிலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி 2வது திருமணம் செய்துகொண்டு இருந்தால் அந்த விவரம் யார் மூலம் நான் தெரிந்து கொண்டேன் என்று எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் மற்றும் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிகளிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கத்தில் அவர்களிடம் சமாதானம் உடன்படிக்கை செய்து பணம் மற்றும் நகையை பெற்றுக்கொண்டு வழக்கினை திரும்ப பெறமால் மேலும் அவர்களை மிரட்டி பணம் பறிக்க முயல்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் சொல்லியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் மீது பொய்யான புகாரை கொடுத்து

அதற்கு ஆதராவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 எதிரிகளான எனது மாமனார், மாமியார் என்னை தனது மகள் போல் பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. வயதான எனது மாமனார், மாமியாரை பராமறிக்காமல் தனி குடுத்தனம் செல்ல வேண்டும் என்று 1ம் எதிரியிடம் நான் தொந்தரவு செய்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி அதற்கு உடன்படாததால் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்கண்ட சமரச மையத்தில் சமரசம் செய்யும் போது 1ம் எதிரியிடம் ஒருமித்த கருத்துடன் விவகாரத்து பெற்றுக்கொள்கிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.